# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

# 2024

**ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික සභාව සහ ජාතික මහ ලේකම් කාර්යාලය**

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**NATIONAL SECRETARIAT FOR PERSONS WITH DISABILITIES**

**ග්‍රාමීය සංවර්ධන, සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය**
**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு**
**MINISTRY OF RURAL DEVELOPMENT, SOCIAL SECURITY AND CMMUNITY EMPOWERMENT**

# உள்ளடக்கம்


உள்ளடக்கம்.......... 01

முன்னுரை .......... 02

நிறைவேற்று அறிக்கை .......... 03

அறிமுகம்.......... 04

தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று .......... 05

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கட்டமைப்பு .......... 06

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிறுவனம்சார் கட்டமைப்பு .......... 07

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின்
தவிசாளரின் அறிக்கை .......... 08

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
பணிப்பாளர் அவர்களின் அறிக்கை .......... 09-16

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் .......... 17-21

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
காசுப் பாய்யச்சல் கூற்று .......... 22

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிதி நிலவரக் கூற்று .......... 23-24

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய
செயலகத்தின் நிதிசார் செயல்திறன் கூற்று.......... 25

2022 டிசம்பர் 31 நிறைவடைந்த ஆண்டின் நிதிசார் கூற்றுக் குறிப்புகள் .......... 26-27

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிதிநிலை கூற்றுக்கான குறிப்புக்கள்.......... 28

2022 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுக்களுக்கான
நாளேட்டுப் குறிப்புக்கள் .......... 29-30

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை .......... 31-46

# முன்னுரை

இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களினையும் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்கும் தொலைநோக்குடன் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல், மீள்விருத்தி செய்தல், பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பிலான அல்லது துணை விடயங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளினைச் செய்தல், வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு, அபிவிருத்திச் செயற்பாடுகளினை அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் பிரதான கடமைப் பொறுப்புக்களாகும்.

சகல அங்கவீனமுற்ற சமுதாயத்தின் நலன்புரி, உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் 2024 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்றிறனை, இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் கௌரவ பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல் இவ்வருடாந்த அறிக்கையின் நோக்கமாகும்.

# நிறைவேற்றுப் பொழிப்பு

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்காக 2024 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல் செயற்பாடுகள் மற்றும் அமைச்சுக்கள் மாற்றங்களினைக் காரணமாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும்போது பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிட்டபோதிலும் 2024 ஆம் ஆண்டு தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் அடையப் பெற்ற பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் 100% ஆகும்.

பிறவியிலோ அல்லது அதைத் தொடர்ந்து ஏற்படும் நிகழ்வுகளிலோ அங்கவீன நிலைக்கு உட்பட்ட சமுதாயத்திற்காகவும் அதே போல சிறுநீரக நோயாளர்களினைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டும் நோக்குடனும் அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்ட ரூபா. 5,000/- வாழ்வாதார உதவிக் கொடுப்பனவினை ரூபா. 7500/- வரை அதிகரிப்புச் செய்து 2024 ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல அக் கொடுப்பனவுகளினைப் பெற்றுக் கொள்வதற்குக் காத்திருப்புப் பட்டியலிலுள்ள தகைமைகளினைப் பெற்ற சகலருக்கும் இக்கொடுப்பனவுகள் 2024 மே மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 136201 அங்கவீனமுற்ற நபர்களுக்கும் மற்றும் 47244 சிறுநீரக நோயாளர்களுக்கும் இவ்வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம் மகத்தான பணியினை வெற்றிகொள்ளுவதற்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரினதும் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சரினதும் வழிகாட்டல் அதேபோல அமைச்சின் பணியாட்தொகுதியினரின் ஒத்துழைப்பினையும் மிகவும் பாராட்டுதல் வேண்டும்.

அதேபோல மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரினதும் மற்றும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சின் செயலாளரினதும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களினை விசேடமாகக் குறிப்பிடுவதுடன், அமைச்சின் கீழுள்ள பிற நிறுவனங்களின் பணியாட்தொகுதி, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணியாட்தொகுதி, மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகப் பிரிவுகளினதும் மாவட்ட செயலகங்களினதும் விடயம் தொடர்பில் கடமைகளினை முன்னெடுக்கும் சகல சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தச் செயற்பாட்டிற்கும் பங்களிப்பினை வழங்கிய சகல உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

# அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்கு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினை உருவாக்குவதற்கும், அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உட்பட நிவாரணங்கள் வழங்கும் நோக்குடனும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் செயல்பட்டு வருகிறது.

2024 ஆம் ஆண்டில் அங்கவீனமுற்ற நபர்களுக்காக இடம்பெற்றுவரும் சட்டம்சார் சேவைகள், நலன்புரி, புனர்வாழ்வு, வலுவூட்டுவதற்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. தற்போதைய சமூகத் தேவையினை அடையாளம் கண்டு, அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு ஆகக்கூடிய நீதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றினைத் தயாரித்தல், சைகை மொழிச் சட்ட வரைவுகளினைத் தயாரித்தல், அணுகல் விதிமுறைகள் தொடர்பிலான தற்போதைய வர்த்தமானி அறிவிப்பினை சர்வதேச தரநிலைகளுக்கிணங்க வரைதல், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்தல், அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயற்றிட்டமொன்றினைத் தயாரித்தல் (2025 - 2030), அங்கவீனமுற்ற நபர்களுக்கான தரவுத் திட்டமொன்றினைத் தயாரித்தல், அதேபோல குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகள், சிறுநீரக நோய் உதவிக் கொடுப்பனவுகள், மருத்துவ உதவிகள், கல்வி உதவிகள், சுய தொழில் உதவிகளினை வழங்குதல், உதவிசார் உபகரணங்கள், வீடமைப்பு உதவிகள், சுகாதார வசதிகளுக்கு உதவிகளினை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்களினை பிரத்தியேகத்துறையில் பணிக்கமர்த்துதல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், அங்கவீனமுற்ற நபர்களுக்கான நிறுவன மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலாக ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் அரசில் பதிவு செய்யப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் நிறுவனங்களினை மேம்படுத்துதல், அங்கவீனமுற்ற நபர்களுக்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் உலர் உணவுப் பொருட்களினை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் குறைந்த வசதிகளினைக் கொண்ட பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களினை வழங்குதல், உளத்தினைத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், அங்கவீனத்தின் இயலுமைக்கேற்ப சுய தொழில்களினை முன்னெடுப்பதற்கு விற்பனை செய்யும் வண்டிகளினை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களின் அங்கத்தவர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

அதனூடாக அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டுவதனூடாக அவர்களினை நாட்டின் வளங்களாக உருவாக்கி, மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்குதாரர்களாக்கி, அங்கவீனமுற்ற நபர்கள் மீது சமுதாயத்தில் நிலவும் பாரம்பரிய, கீழ்த்தரமான உளப்பாங்கினை மாற்றியமைத்து, அங்கவீனமுற்ற நபர்களும் பிற பிரஜைகளினைப் போலவே சம உரிமைகளினைப் பெறுவதை உறுதி செய்வதல், அது தொடர்பில் அவர்களுக்கு வாய்ப்புக்களினை வழங்கி கண்ணியமான வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதும் எமது இலட்சியமாகும்.

## அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

**1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் சட்டத்தின் சட்ட விதிகளுக்கு அமைவாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.**


## தொலைநோக்கு

**இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களினையும் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குதல்.**


## பணிக்கூற்று

**வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு, மேம்பாட்டுச் செயற்பாடுகளினை அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்,**

## அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



# அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நிறுவனம்சார் கட்டமைப்பு



# அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் தவிசாளர் அவர்களின் செய்தி

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பொறுப்பு நிற்பதற்கு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் இவ்வமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு நலன்புரி உதவிகளினை வழங்குதல், அங்கவீனம் ஏற்படும் பிரதான காரணங்களினைத் தடுத்தல் மற்றும் முகாமை செய்தல், புள்ளிவிவரங்களினைப் பராமரித்தல், புனர்வாழ்வளித்தல், அங்கவீனமுற்ற நபர்களுக்கென நிறுவப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளினைச் செயலாக்குதல், ஆலோசனை வழங்குதல், உதவி வழங்குதல், பௌதிகச் சூழலினை உகந்தவாறு அமைத்தல் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளினைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டல்களினை வழங்குதல் போன்ற தொடர்புடைய நோக்கங்களினை அடைய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

சமூக நீதியினை உறுதி செய்தல் மற்றும் யாரையும் கைவிடாதவாறு அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகளுக்கான தற்போதைய வர்த்தமானி அறிவிப்பினை இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு சர்வதேச தரநிலைகள் மற்றும் விவரக் குறிப்புக்களுக்கேற்ப வரைவு செய்து தயாரித்தல், உரிமைச் சட்டம், சைகை மொழிச் சட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் தொழிலில் ஈடுபடக்கூடிய மட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரத்தியேகத் துறையில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல் போன்ற பணிகள் அதி உன்னதமானவையாகும்.

தற்போதைய அரசின் கொள்கைகளுக்கமைவாக தடையற்ற சமூக வாழ்வு, நீதிக்கான சமமான அணுகல் போன்ற எண்ணக்கருவுக்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கு அர்த்தமுள்ள மற்றும் நிறைவான வாழ்வொன்றினை ஏற்படுத்திக் கொடுக்கும் தீர்மானங்களினை எடுப்பதற்கான தேவைப்பாடு அதாவது இதுவரை குறைபாடுடன் காணப்பட்ட அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான தரவுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ரூபா. 100 மில்லியன் பாதீட்டு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சட்டப் பணிகள் பல எதிர்வரும் ஐந்து வருடங்களில் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்விலக்குகளினை அடைவதற்கு முதன்மையான பொறுப்பினை வகிக்கும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் உள்ளடங்கலான பணியாட்தொகுதி, பிரத்தியேக மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்னெடுத்துவரும் பணியினை பாராட்டுவதுடன், எனது இதயபூர்வமான நன்றியினை இத் தருணத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன

உபாலி பன்னிலகே,
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

தவிசாளர்
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை

# அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் பணிப்பாளர் அவர்களின் அறிக்கை

**அரசின் கொள்கைகள், தீர்மானங்களுக்கமைவாக, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கொள்கைசார் தீர்மானம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் பணி புரிந்து, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2024 ஆம் ஆண்டில் சுவீகரித்துக் கொள்ளப்பட்ட செயற்றிறன் தொடர்பிலான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

**1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களினை உரிமைகளினைப் பாதுகாக்கும் புதிய சட்டவரைவு**

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பிலான சட்டவரைவு நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சினால் வரைவு செய்யப்பட்டு வருகிறது. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மகாநாட்டின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் சட்டத்தினைத் தயாரிப்பதற்கான புதிய அமைச்சரவை அங்கீகாரம் 2025.02.04 ஆந் திகதி கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் உரிமைகள் சட்டக் குழுவினைக் கூட்டி வரைவு செய்யும் செயற்பாடுகளினை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சைகை மொழிச் சட்ட வரைவு**

சைகை மொழிச் சட்ட வரைவின் இறுதி வரைவு 2024.02.12 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் இவ்வமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அரசியலமைப்புத் தொடர்பிலான சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டவரைவு தொடர்பில் புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசியலமைப்புத் தொடர்பிலான சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் புதிய அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி**

**அரச கட்டிடங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்களினை, அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடிய முறையில் அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும்**

அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது காணப்படும் நிலைமைக்குப் பொருந்தும் வகையில் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய துறை தொடர்பில் நிபுணத்துவத்தினைக் கொண்ட குழுவினூடாகத் திருத்தச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தேசியக் கொள்கை மற்றும் தேசிய செயற்றிடத்தினைத் தயாரித்தல்.

அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் தற்போதுள்ள தேசியக் கொள்கையினை நாளதுவரைப்படுத்தி மீளவும் தயாரிக்கும் செயற்பாடுகள் மற்றும் (2025 - 2030) தேசிய செயற்றிட்டத்தினைத் தயாரிக்கும் செயற்பாடுகள் அங்கவீனமுற்ற நபர்களின் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியின் அனுசரணையின் கீழ் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நிலையங்களினை அமைத்தல்

நாடுமுழுவதுமாக 6 பாதுகாப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு அமைப/18/0755/711/015 என்ற பத்திரத்தினூடாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதுவரையில் மாத்தறை அக்குரஸ்ஸ முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 2025 ஆம் ஆண்டில் அதன் பணிகளினை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளினை வழங்குதல்

அரச மருத்துவசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளினை வழங்குவதற்கும், சிகிச்சைகளுக்குச் செல்வதற்கும், இருதயம், கண்வில்லைகள், சிறுநீரகம், மூளை, இடுப்பு எலும்பு மற்றும் காது திசு ஒட்டுதல் போன்ற வேண்டிய சத்திர சிகிச்சைக்குத் தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்குமென, குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. 30,000/- வரை இதன் கீழ் உதவி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 630 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 16.17 |

உதவிசார் உபகரணங்களினை வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒன்றுதிரட்டும் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினைச் சுயாதீனமான நபர்களாக உருவாக்குவதற்கும் குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு, மூக்குக் கண்ணாடிகள், சக்கரநாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், முச்சக்கர வண்டிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்றவாறும், காற்று மெத்தை, நீர் மெத்தை போன்ற விசேட உபகரணங்கள் தொடர்பிலும் ஆகக்கூடியது ரூபா. 20,000/- வரையிலான நிதியுதவிகளினை வழங்குவது இடம்பெறுகிறது. செவிப்புலக் கருவிகளினைப் பெறுவதற்கு ரூபா. 15,000/- தொடக்கம் ரூபா. 35,000/- நிதி உதவியினை வழங்குதல் இடம்பெறுகிறது. குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு மருத்துவப் பரிந்துரைகளின் கீழ் இவ்வுதவி வழங்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் 19 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், உபகரணங்கள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

| கொமட் சக்கர நாற்காலிகள் | சக்கர நாற்காலிகள் | கையூன்றுகோல்கள் | ஊன்றுகோல்கள் | வோக்கர் | மூக்குக் கண்ணாடிகள் (கிட்ட தூரப் பார்வை) | மூக்குக் கண்ணாடிகள் (வாசிப்பு) | விசேட உபகரணங்கள் | செயற்கைக் கால்கள் | விசேட பாதணிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 38 | 98 | 100 | 42 | 63 | 83 | 10000 | 39 | 22 | 10 |

## திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களினதும் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்கும் விசேடக் கல்வி அலகுகள் தொடர்பிலும் அவர்களின் விளையாட்டுக்கள், கலைகள், அழகியல் திறன்கள் மற்றும் பிற கெட்டித்தனங்களினை மெருகூட்டும் நோக்குடன் ரூபா. 50,000 ஆகக்கூடியதன் கீழ் நிதி அனுசரணை வழங்குதல் இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை (நிறுவனங்கள்) | 08 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.39 |

**சுய தொழில் உதவிகளினை வழங்குதல்**

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களில் காணப்படும் வறுமையினைக் குறைப்பதற்கு சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்கு நபர் ஒருவருக்கு அல்லது குடும்பமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 40,000/- வரையான சுய தொழில் உதவிகளினை வழங்குவது இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 175 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி/) | 6.84 |

**கல்வி உதவிகளினை வழங்குதல்**

குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்ற பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு தடவை மாத்திம் ஆகக்கூடியது ரூபா. 20,000 என்றவாறு கல்வி உதவிகளினைப் பெற்றுக்கொள்வதற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 684 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 11.74 |

**தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுதல்**

இச் செயலகத்தின் கீழ் 151 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்படுவதுடன், இந் நிறுவனங்களில் அநேகமானவை முறைசார் நிதியுதவி கிடைக்கப் பெறாத நிறுவனங்களாகும். கிடைக்கும் வேண்டுகொள்களுக்கமைவாக, களப் பரீட்சிப்பினூடாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்நிறுவனங்களின் பௌதிக நிர்மாணிப்புத் தொடர்பில் ரூபா இரண்டு இலட்சம் வரை நிதியுதவியினை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை (நிறுவனங்கள்) | 04 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.69 |

**சர்வதேச அங்கவீனமுற்றோர் தினக் கொண்டாட்டம்**

சர்வதேச அங்கவீனமுற்றோர் தினத்திற்கு இணையாக “அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் அவர்களுடன் மற்றும் அவர்களினால் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கு

செயலூக்கமாக ஒன்றிணைதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு விவாத நிகழ்ச்சி மற்றும் அங்கவீனமுற்ற நபர்களினை உள்ளடக்கிய நிலையான எதிர்காலத்திற்காக அவர்களின் தலைமைத்துவத்தினை விரிவுபடுத்துதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் மாத்தறை பொல்கேன கடற்கரையில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல். இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 1.14 மில்லியன் பிரத்தியேகப் பிரிவின் உதவிகள் மற்றும் நன்கொடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.47 மில்லியன் மாத்திரமே திறைசேரி ஒதுக்கீடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன.

விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிகளினை வழங்குதல்.

இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களினை வழங்குவதற்கு மாதாந்தம் ரூபா. 0.75 மில்லியன் என்றவாறு வருடந்தோறும் ரூபா. 9 மில்லியன் நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பிரத்தியேகத் துறையில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

தொழிலில் ஈடுபடக்கூடிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் பிரத்தியேகத் துறையின் தொழிலுக்கு முன்வைக்கப்படுவர் என்பதுடன், அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்திலிருந்து 50% (ஆகக்கூடியது ரூபா. 15,000 என்றவாறு) 24 மாதாந்களுக்கு இவ் அலுவலகத்தினூடாக கொடுப்பனவினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வருடத்தில் 97 அங்கவீனமுற்ற நபர்கள் (2023 ஆம் ஆண்டில் 31 பேர் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 66 பேர்) தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இயலுமை கிடைத்துள்ளது.

வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்

எந்த வொரு வருமானமுமற்ற காணி தொடர்பில் உரித்தினைக் கொண்டிருந்தபோதிலும் வீடொன்று இல்லாத அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடு ஒன்றினைக் கட்டுவது தொடர்பில் அல்லது ஏற்கனவே உள்ள வீட்டினைப் பழுதுபார்ப்பது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டத்தினூடாக உதவிகள் வழங்கப்படுகின்றன. தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சீட்டிழுப்பினூடாக கிடைக்கப் பெறும் வருமானத்திலிருந்து 5% வருடந்தோறும் இந்நிதியம் தொடர்பில் ஒதுக்கி நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 500,000/- நிதியும், பழுதுபார்ப்பதற்கு ரூபா. 250,000/- நிதியும் தவணை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 204 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 27.46 |

அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதார வசதிகளினை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு மலசலகூடமொன்றினை நிர்மாணிப்பதற்கு ஆகக்கூடியது ரூபா. 100,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சுப்பிரி வாசனா லொத்தர் வருமானத்திலிருந்து 5% நிதியத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 66 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 6.59 |

2024 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகளின் பொழிப்பு

| | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 50.00 | 50.00 |
| மீண்டுவரும் | 21.00 | 09.22 |

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகளினை வழங்கும் அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினை மேம்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் உலர் உணவுப் பொருட்களினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகள் மற்றும் குறைந்த வசதிகளினைக் கொண்ட பிள்ளைகளுக்கு ரூபா. 15,000/- பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உளத்தினைத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

- அங்கவீனத்தின் இயல்புக்கேற் சுய தொழிலினை முன்னெடுப்பதற்கு விற்பனை வண்டிகளினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.
- அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களின் அங்கத்தவர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன

**எதிர்கால இலக்குகள்**

- 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் புதிய சட்ட மூலத்தினை நிறைவேற்றுதல்.
- சைகை மொழிச் சட்ட வரைவினை அங்கீகரித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தேசிய செயற்திட்டமொன்றினைத தயாரித்தல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரவேசிப்பு வசதிகளினை வழங்கும் வர்த்தமானியின் திருத்தச் செயற்பாடுகளினை நிறைவு செய்தல்..
- அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகளினை ஆரம்பித்தல்.
- 2025 ஆம் ஆண்டில் 60 அங்கவீனமுற்ற நபர்களினை தொழிலுக்கமர்த்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான தரவுத்திட்ட மொன்றினைத் தயாரித்தல்.

ஜயமாலி சீ விக்ரமஆரச்சி,
பணிப்பாளர்,
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்.

## அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

## 2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான குறிப்பிடத்தக்க கணக்கியகல் கொள்கைகள்

### 01. கூட்டுத் தகவல்

### பொது

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் (NSPD), 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களினை உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அங்கவீனமுற்ற நபர்களின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமானது பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II இல் I வது மாடியில் அமைந்துள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், மாதாந்த வாழ்வாதர உதவி, சுய தொழில் உதவி, கல்வி உதவி, மருத்துவ உதவி போன்ற உதவிகளினை அங்கவீனமுற்ற நபர்களுக்கு வழங்குவதில் ஈடுபட்டு வருகிறது.

இது தவிர, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த உதவி (அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்) மற்றும் அங்கவீனமுற்ற நபர்களினைத் தொழிலுக்கமர்த்தும் நிறுவனங்களுக்கு சம்பள மானியங்களினையும் வழங்குவதை ஒருங்கிணைத்து வருகிறது.

### 02. <u>இணக்கக் கூற்று</u>

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதிசார் கூற்றுக்களானவை, நிதிநிலவரக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, சமபங்கு மாற்றங்கள் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் குறிப்புக்களினை உள்ளடக்கியுள்ளன. இக்கூற்றுக்கள், இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வகுக்கப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கியல் தர நிலைகளுக்கு(SLPSAS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் பிற தேவைப்பாட்டுடன் இணங்குகிறது.

### 03. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

பொதுவான கொள்கைள்

#### 3.1.1 தயாரிப்பின் அடிப்படை

இந்நிதிசார் கூற்றுக்களானவை, கிட்டிய ரூபா வடிவில் இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதுடன், வரலாற்றுச் செலவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளினைத் தொடர்ந்து பிரயோகித்து வருகிறது.

3.1.2 **ஒப்பீட்டுத் தகவல்**

**தற்போதைய நிலையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான போதெல்லாம், கடந்த ஆண்டின் புள்ளிவிவரங்கள் மற்றும் கட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.**

3.1.3 **ஐந்தொகை நிகழ்வுகளுக்குப் பிந்தைய**

**அனைத்து விடயப் பிந்தைய ஐந்தொகை நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, பொருத்தமான இடங்களில், நிதிநிலைக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்பில் வெளிப்படுத்தல்களின் சரி செய்தல்கள் செய்யப்பட்டுள்ளன.**

3.2 **சொத்துக்ளின் மதிப்பீடு மற்றும் அவற்றின் அளவீட்டு அடிப்படைகள்**

3.2.1 **சரக்கிருப்புக்கள்**

**காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கான உரிய கொடுப்பனவுகளினை மேற்கொண்டதன் பின்னர், சரக்கிருப்புக்கள், குறைந்த விலை மற்றும் நிகர உணரக்கூடிய மதிப்பில் அளவிடப்படுகின்றன. நிகர உணரக்கூடிய மதிப்பு என்பது சாதாரண வணிகப் போக்கில் சரக்குகளை விற்கக்கூடிய விலையாகும் என்பதுடன், அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை விற்பனைக்கு அவசியமாகும்.**

**சரக்குகளினை, அதன் தற்போதைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான செலவுகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு கணக்கிடப்படுகின்றன :-**

**நுகர்வுப் பொருட்கள் - முதலில் உள்ளே வருபவை, முதலில் வெளியே செல்பவை (FIFO) என்ற அடிப்படையில் உண்மையான செலவில்.**

3.2.2 **காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும்**

**கையிலுள்ள காசு, தேவை வைப்புத் தொகை, குறுகிய கால அதிக திரவ முதலீடுகள், அறியப்பட்ட பணத்திற்கு உடனடியாக மாற்றக்கூடியதும் மற்றும் மதிப்பு மாற்றங்களின் சிறிய தாக்கத்தினையுமே காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளுமாக வரையறுக்கப்படுகிறது.**

**காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளானவை, கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள காசினையுமே உள்ளடக்குகிறது.**

3.2.3 **சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்**

a) **செலவு**

**சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு இழப்பு மற்றும் ஆதாயத்தினைக் குறைத்து செலவில் பதிவு செய்யப்படுகிறது.**

b) **மறுசீரமைப்புச் செலவு**

**முதலில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திறனிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் பலன்களினைப் மீட்டெடுப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு, சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களினைப் பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பதற்குச் செய்யப்படும் செலவுகள், செலவுகளாக அங்கீகரிக்கப்படுகிறது.**

c) தேய்மானம்

ஆண்டின் தொடக்கத்தில் புத்தகங்களிலுள்ள சொத்தின் குறைப்பு அல்லது குறைப்பு மதிப்பின் நிலையான சதவீதமாகக் குறைந்து வரும் இருப்பு முறையைப் பயன்படுத்தி தேய்மானத்திற்கான ஒதுக்கீடு கணக்கிடப்படுகிறது. (SLPSAS) 7 இன் பிரகாரம் தேய்மானத்தின் அளவு ஒவ்வொரு ஆண்டும் குறைகிறது.

| | |
|---|---|
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் | 15% |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் | 15% |

3.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும் பொறுப்புக்கள், தேவையின் பேரில் அல்லது ஐந்தொகை குறிப்பிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவையாகும்.

3.3.1 ஏற்பாடுகள்

கடந்தகால நிகழ்வின் விளைவாக NSPD க்கு தற்போதைய கடமை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) இருக்கும்போது, பொறுப்புக்களினைத் தீர்ப்பதற்கு, பொருளாதார நன்மைகளினை உள்ளடக்கிய வளங்களினை வெளியேற்றுதல் வேண்டும் என்பதுடன், பொறுப்புக்களின் அளவு தொடர்பில் நம்பகமான மதிப்பீட்டினைச் செய்யக்கூடிய வேளையில் முன் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகிறது.

3.4 விரிவான வருமானக் கூற்று

3.4.1 வருவாயினை இனங்காணுதல்

அரச மானியம்

மூலதனத்திற்கான அரச மானியம் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மூலதன மானியமானது, முக்கிய வருமான ஆதாரம் என்பதுடன் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படுகிறது.

மேலும் லொத்தர் விற்பனையின் மூலம் தேசிய லொத்தர் சபைக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஐந்து சதவீதம் (5%) அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளினை வழங்கும் நோக்கத்திற்காகத் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

3.4.2 செலவினை அடையாளம் காணுதல்

அ) ஏற்படும் செலவுகளுக்கும் குறிப்பிட்ட வருமானப் பொருட்களின் இயக்கத்திற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் வருமான அறிக்கையில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. செயற்பாடுகளினை நடாத்துவதற்கும், சொத்து. பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களினைத் திறமையான நிலையில் பராமரிப்பதற்கும் ஏற்படும்

அனைத்துச் செலவுகளும், ஆண்டுக்கான இழப்பினை மதிப்பீடு செய்வதில் வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

ஆ) வருமான அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு, செலவின முறையின் செயல்திறன் NSPD யின் செயல்திறன் அம்சங்களினை நியாயமாக முன்வைத்துள்ளது என்பது தேசிய சபை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து என்பதால் அத்தகைய விளக்கக் காட்சி முறை பின்பற்றப்படுகிறது.

இ) கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சினால் ஈடுசெய்யப்படும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியமான ரூபா. 21,445,151/- நிதிநிலைக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 3.4.3 காசுப் பாய்ச்சல்

NSPD இன் காசுப் பாய்ச்சல், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (SLPSAS) 02 – கூற்றின் பிரகாரம், ”மறைமுக முறையைப்” பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது.

## 4.0 கடப்பாடுகள் மற்றும் தற்செயல்கள்

தற்செயல்கள் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து எழும் சாத்தியமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் என்பதுடன், அவை NSPD இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வு அல்லது நிகழாத நிலையில் மட்டுமே அவை உறுதிப்படுத்தப்படுகின்றன.

## 5.0 சபை உறுப்பினர்களின் பொறுப்புக் கூற்றுக்கள்

இந்நிதி நிலைக் கூற்றினைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபைக்கே உரித்தாகும்.

### 6.0 இறுதிக் கணக்குகளுக்கான அங்கீகாரம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் (NCPD) செல்லுபடியான காலப்பகுதி 2024.10.07 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளதுடன், புதிய NCPD ஜனாதிபதியினால் நியமிப்புச் செய்யப்படவில்லை. புதிய NCPD இன் முதலாவது கூட்டத்தின் உள்ளடக்க அங்கீகாரத்திற்காக இந்நிதிநிலைக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர் 2025.02.27 ஆந் திகதியன்று இந்நிதிநிலைக் கூற்றுக்களினை அங்கீகரித்துள்ளார்.

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான**

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன | 2024 | 2023 | |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| மிகை/(பற்றாக்குறை) | 120,474,123 | 147,747,119 | * Restated |
| காசற்ற அசைவுகள் | | | |
| தேய்மானம் | 398,800 | 469,176 | |
| சந்தேகத்திற்கிடமான கடன்களுக்கான ஒதுக்கீட்டில் அதிகரிப்பு | - | - | |
| செலுத்த வேண்டிய தொகை அதிகரிப்பு | 1,206 | (158,700) | * Restated |
| கடன்கள் அதிகரிப்பு | - | - | |
| பணியாளர் செலவுகள் தொடர்பான ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு | - | - | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களினை விற்பனை செய்வதில் (இலாபங்கள்)/.இழப்புக்கள் | - | - | |
| முதலீடுகளினை விற்பதன் மூலம் (இலாபங்கள்)/இப்புக்கள் | - | - | |
| பிற நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு | | | |
| மறு மதிப்பீடு காரணமாக முதலீடுகளில் அதிகரிப்பு | - | - | |
| வரவுகள் மற்றும் வைப்புக்களில் அதிகரிப்பு | (127,462,413) | (149,749,459) | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(6,588,284)** | **(1,691,864)** | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள் | | | |
| பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல் | - | - | |
| பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம் | - | - | |
| முதலீடுகளினை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் | - | - | |
| வெளிநாட்டு நாணயப் பத்திரங்களினைக் கொள்வனவு செய்தல். | - | - | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள் | - | - | |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள் | - | - | |
| கடன்களிலிருந்து கிடைக்கும் வருமானம் | - | - | |
| கடன்களினைத் திருப்பிச் செலுத்துதல் | - | - | |
| அரசாங்கத்திற்கு விநியோகம் மற்றும் ஈவுத் தொகை | - | - | |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள் | - | - | |
| **காசு மற்றும் காசுச் சமன்பாடுகளின் அதிகரிப்பு/குறைவு** | **########** | **(1,691,864)** | |
| காலப்பகுதியின தொடக்கத்தில் காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும் (குறிப்பு A) | 9,071,446 | 10,763,309 | |
| காலப்பகுதியின முடிவில் காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும் (குறிப்பு A) | **2,483,162** | **9,071,446** | |

**குறிப்பு A**

**காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும்**

| சாதகமான மீதிகள் | | |
|---|---|---|
| NSPD **நடைமுறைக் கணக்கு** - BOC 2938104 | 2,447,356 | 3,625,278 |
| **வீடமைப்பு நடைமுறைக் கணக்கு** - BOC 7040561 | 35,806 | 5,446,168 |
| குறுகியகால முதலீடுகள் | - | - |
| **வருட முடிவில் காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும்** | **2,483,162** | **9,071,446** |

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான
நிதி நிலவரக் கூற்று

| அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன | குறிப்பு | 2024 | 2023 | |
|---|---|---|---|---|
| சொதத்துக்கள் | | | | |
| நடைமுறைச் சொதத்துக்கள் | | | | |
| பெறத்தக்கவைகள் மற்றும் வைப்புக்கள் | 01 | 360,853,401 | 233,390,988 | |
| காசும் மற்றும் காசுச் சமன்பாடும் | 02 | 2,483,162 | 9,071,446 | |
| | | **363,336,563** | **242,462,434** | |
| நடைமுறையச்ச சொத்துக்கள் | | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 03 | 2,259,866 | 2,658,666 | |
| | | 2,259,866 | 2,658,666 | |
| மொத்தச் சொத்துக்கள் | | **365,596,429** | **245,121,100** | |
| சமபங்கள் மற்றும் பொறுப்புக்கள் | | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | * Restated |
| ஒதுக்கீடுகள் | 04 | 162,840 | 162,840 | (Note 12.1) |
| திரட்டப்பட்ட செலவுகள் | 05 | 1,206 | - | |
| | | **164,046** | **162,840** | * Restated |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | | | |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **164,046** | **162,840** | * Restated |
| தேறிய சொதத்துக்கள் | | **365,432,383** | **244,958,260** | * Restated |
| சமபங்கு | | | | * Restated |
| திரட்டப்பட்ட மிகை/ (பற்றாக்குறை) | | 365,432,383 | 244,958,260 | (Note 12.5) |
| இருப்புக்கள் | | | | |
| தேறிய சமபங்கு | | **365,432,383** | **244,958,260** | * Restated |

மேலே கொடுக்கப்பட்டுள்ள திசம்பர் 31, 2024 நிலவரப்படி நிதி நிலை அறிக்கை மற்றும் இணைக்கப்பட்ட பிற நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டவை என்று நாம் சான்றளிக்கின்றோம்.

நிதி நிலை அறிக்கைகளின் பொறுப்புக்களினை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

..................................................................
மலர்மதி கங்காதரன்,
செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு
மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு

.........................................................
ஜயமாலி சி. விக்ரமாராச்சி,
பணிப்பாளர, அங்கவீனமுற்ற
நபர்களுக்கான தேசிய செயலகம்,

.....................................................................

.....................................................................

சான்றளிக்கப்பட்டது

.........................................................
ஐ.எம்.ஐ.சி. இளங்கோன்,

கணக்காளர்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்,

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**
**2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்றிறன் கூற்று**
**அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன**

| | குறிப்பு | 2024 | 2023 |
|---|---|---|---|
| வருவாய் | 06 | 207,204,491 | 175,822,359 |
| பிற வருமானம் | | - | - |
| | | **207,204,491** | **175,822,359** |
| **கழித்தல் : செலவுகள்** | | | |
| நேரடி மூலதனச் செலவு | 07 | 86,144,551 | 68,315,540 |
| நிர்வாகம் மற்றும் தாபனச் செலவுகள் | 08 | 585,817 | 629,926 |
| **மொத்தச் செலவுகள்** | | **86,730,368** | **68,945,466** |
| **தொழிற்பாட்டுச் செலவித்தினை விட வருமானம்** | | **120,474,123** | **106,876,893** |
| **கழித்தல்: நிதி மற்றும் பிற செலவுகள்** | | - | - |
| **பிற விரிவான வருமானத்திற்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை)** | | **120,474,123** | **106,876,893** |
| **பிற விரிவான வருமானம்** | | - | - |
| **ஆண்டுக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)** | | **120,474,123** | **106,876,893** |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான**

**சமபங்கு மாற்றங்களின் கூற்று**

**அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன**

| | திரண்ட நிதி ரூபா. சதம் | மொத்தம் ரூபா. சதம் | |
|---|---|---|---|
| **2023 திசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | 243,918,066 | **243,918,066** | |
| **கட்டிடத்தின் மீள் மதிப்பீடு** | | | |
| **காணியின் மீள் மதிப்பீடு** | | | |
| **முந்தைய ஆண்டின் சீர் செய்தல்கள் (* மீளக் குறிப்பிடப்படுதல், குறிப்பு 12.5)** | 1,040,194 | 1,040,194 | (குறிப்பு 12.5) |
| **2023 திசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி (சரி செய்யப்பட்டது)** | 244,958,260 | 244,958,260 | |
| **வருடத்தில் சரி செய்தல்கள்** | | | |
| **காலப்பகுதிக்கான மிகை/பற்றாக்குறை** | 120,474,123 | 120,474,123 | |
| **2024, திசம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி** | **365,432,383** | **365,432,383** | |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**
**2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான**
**நிதிச் செயற்றிறன் கூற்று**
**அனைத்துத் தொகைகளும்**
**இலங்கை ரூபாவில் உள்ளன**

| | 2024 | 2023 | |
|---|---|---|---|
| **குறிப்பு - 01 - பெறத்தக்கவைகள் மற்றும் வைப்புக்கள்** | | | |
| சுப்பிரி வாசனா லொத்தரிலிருந்து பெறப்பட்டவை | 349,602,545 | 225,104,617 | |
| பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையான வைப்பு வட்டி - FD 90309500 | 21,045 | 22,758 | * மீளக் குறிப்பிடுதல் (குறிப்பு 12.3) |
| பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையான வைப்பு வட்டி - FD 90309752 | - | 1,021,575 | * மீளக் குறிப்பிடுதல் (குறிப்பு 12.4) |
| பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையான வைப்பு வட்டி - FD 92338154 | 18,334 | | |
| பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையான வைப்பு வட்டி - FD 92521901 | 5,618 | | |
| நிலையான வைப்பு - FD 90309752 | - | 5,000,000 | |
| நிலையான வைப்பு - FD 90309500 | 2,439,083 | 2,242,037 | * Restated (Note 12.2) |
| நிலையான வைப்பு - FD 92521901 | 6,641,883 | | |
| நிலையான வைப்பு - FD 92338154 | 2,124,893 | | |
| | **360,853,401** | **233,390,988** | |

| | 2024 | 2023 |
|---|---|---|
| **குறிப்பு - 02 - காசும் மற்றும் காசுச் சமன்பாடும்** | | |
| **சாதகமான மீதிகள்** | | |
| NSPD நடைமுறைக் கணக்கு - BOC 2938104 | 2,447,356 | 3,625,278 |
| வீடமைப்பு நடைமுறைக் கணக்கு - BOC 7040561 | 35,806 | 5,446,168 |
| | **2,483,162** | **9,071,446** |

**குறிப்பு - 03**
**சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

| 3.1 செலவு | 2024.01.01 அன்றுள்ளவாறான மீதி | மேலதிகங்கள்/ இடமாற்றல்கள் | அகற்றல்கள் / இடமாற்றல்கள் | 2024.12.31 அன்றுள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| அலுவலகத் தளபாடம் | 279,926 | - | - | 279,926 |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் | 4,117,485 | - | - | 4,117,485 |
| | **4,397,411** | **-** | **-** | **4,397,411** |

| 3.2 தேய்மானம் | 2024.01.01 அன்றுள்ளவாறான மீதி | காலத்திற்கான கட்டணம்/இடமாற்றல்கள் | அகற்றல்கள் / இடமாற்றல்கள் | 2024.12.31 அன்றுள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| அலுவலகத் தளபாடம் | 181,394 | 14,780 | - | 196,174 |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் | 1,557,352 | 384,020 | - | 1,941,372 |
| | **1,269,569** | **398,800** | **-** | **2,137,546** |

| 3.3 தேறிய புத்தக மதிப்பு | 2024.12.3 அன்று உள்ளவாறான செலவு | திரட்டப்பட்ட தேய்மானம் 2024.12.31 | தேறிய புத்தக மதிப்பு 2024.12.31 |
|---|---|---|---|
| அலுவலகத் தளபாடம் | 279,926 | 196,174 | 83,752 |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் | 4,117,485 | 1,941,372 | 2,176,113 |
| | 4,397,411 | 2,137,546 | 2,259,866 |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**2024 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான**

**நிதிச் செயற்றிறன் கூற்று**
**அனைத்துத் தொகைகளும் இலங்கை**
**ரூபாவில் உள்ளன**

**குறிப்பு - 03**

**சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் ( தொடர்ச்சி ..........)**

| 3.3 தேறிய புத்தக மதிப்பு | 2024 | 2023 | |
|---|---|---|---|
| செலவில் | | | |
| அலுவலகத் தளபாடம் | 83,752 | 98,532 | |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் | 2,176,113 | 2,560,133 | |
| | **2,259,866** | **2,658,666** | |
| **குறிப்பு - 04 - ஓதுக்கீடுகள்** | | | |
| | | | * மீளவும் குறிப்பிடுதல் |
| கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஓதுக்கீடு | 162,840 | 162,840 | ((குறிப்பு 12.1) |
| | **162,840** | **162,840** | |
| **குறிப்பு - 05 - திரட்டப்பட்ட செலவுகள்** | | | |
| திரட்டப்பட்ட தொலைபேசிக் கட்டணங்கள் | 1,206 | - | |
| | **1,206** | **-** | |
| **குறிப்பு -06 - வருவாய்** | | | |
| அரச மானியம் | 50,500,000 | 34,000,000 | |
| சுப்பிரி வாசனா மானியம் | 152,852,928 | 166,557,422 | |
| அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில் | 2,565,000 | 629,178 | |
| பிற உறுதிச்சீட்டு | 322,078 | 1,029,079 | |
| நிலையான வைப்பு வட்டி - FD 90309500 | 195,332 | 242,037 | |
| நிலையான வைப்பு வட்டி - FD 90309752 | 279,795 | - | |
| நிலையான வைப்பு வட்டி - FD 92338154 | 143,227 | - | |
| நிலையான வைப்பு வட்டி - FD 92521901 | 346,131 | - | |
| | **207,204,491** | **202,457,717** | |
| **குறிப்பு = 07 நேரடி மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவினம்** | | | |
| வீடமைப்பு மற்றும் மலசலகூட உதவி | 33,765,362 | 19,530,494 | |
| உதவி கருவிகள் | 11,468,971 | 11,238,035 | |
| சர்வதேச அங்கவீனர் தினம் (2024.12.01) | 529,962 | 185,995 | |
| மருத்துவ உதவி | 16,158,903 | 9,750,568 | |
| சுய தொழில் உதவி | 6,841,309 | 5,119,819 | |
| கல்வி உதவி | 11,740,747 | 5,371,266 | |
| திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 389,399 | 218,425 | |
| EMPO 2023 | - | 280,396 | |
| அச்சு வெளியீடு மற்றும் பிற ஊடகம் | 259,750 | 99,000 | |
| சுய உதவி தன்னார்வ அமைப்பு | 691,600 | 290,950 | |
| அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில் | 2,565,000 | 629,178 | |
| பிற செலவு | 1,733,548 | 1,366,545 | |
| | **86,144,551** | **54,080,672** | |
| **குறிப்பு - 08 - நிர்வாகம் மற்றும் தாபனச் செலவுகள்** | | | |
| அலுவலகத் தளபாடங்கள் தேய்மானம் | 14,780 | 17,388 | |
| கணனிகள் மற்றும் IT உபகரணம் தேய்மானம் | 384,020 | 451,788 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 162,840 | 158,700 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 24,177 | 2,050 | |
| | **585,817** | **629,926** | |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**
**நிதிநிலைக் கூற்றுக்கள் தொடர்பிலான குறிப்புக்கள்**
**2023 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான**
**(சகல தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)**

**குறிப்பு -08 - அங்கீகரிக்கப்படாத ஒப்பந்தக் கடமைகள்**
**அறிக்கையிடப்பட்ட திகதியன்று எவ்வித கடப்பாடும் இருக்கவில்லை.**

**குறிப்பு -09 – தற்செயலான கடப்பாடுகள் மற்றும்**
**தற்செயலான சொத்துக்கள்**

***09.1 தற்செயலான சொத்துக்கள்***
**அறிக்கையிடப்பட்ட திகதியன்று எவ்விதமான பொருள்சார் தற்செயலான சொத்துக்களும் இருக்கவில்லை.**

***09.2 தற்செயலான கடப்பாடுகள்***
**அறிக்கையிடப்பட்ட திகதியன்று வெளிப்படுத்தப்பட வேண்டிய எவ்விதமான பொருள்சார் தற்செயலான கடப்பாடும் இருக்கவில்லை.**

**குறிப்பு - 10 அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர்**
**இடம்பெறும் நிகழ்வுகள்**

**நிதிநிலை அறிக்கை வெளியிட்ட திகதி தொடக்கம் நிதிநிலை அறிக்கைகளுடன் சரி செய்தல் இடம்பெறுதல் அல்லது வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் எதுவும் எழவில்லை.**

**குறிப்பு - 11 – உரிய தரப்பினருடனான கொடுக்கல்**
**வாங்கல்கள்**

**குறிப்பு - 12 – கடந்த வருட சீர் செய்தல்கள்**

**கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டு**
**மீதியினைச் சரி செய்தல்.**

**தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக அதிகமாக ஈடுசெய்யப்பட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறாகும்.**

| | ரூ. ச. |
|---|---|
| **2021 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணங்களுக்கான பற்றாக்குறையினை ஒதுக்குதல்,** (ரூ.158,700.00-ரூ.78,000.00) | 80,700 |
| **2022 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணங்களுக்கான பற்றாக்குறையினை ஒதுக்குதல்,** (ரூ.158,700.00- ரூ.78,000.00) | 80,700 |
| | 161,400 |

| **2022 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு** | ரூ. ச. |
|---|---|
| **2022 நிதிக் கூற்றின் பிரகாரம் மீதி** | 156,000 |
| **கணக்காய்வுக் கட்டணப் பற்றாக்குறை ஒதுக்கீடுகளுக்கான சரிசெய்தல்கள்.** | 161,400 |
| **2022 நிதிநிலைக் கூற்றுக்கள் தொடர்பில் மீளவும் தயாரிக்கப்பட்ட மீதி** | 317,400 |

| **2022 திரண்ட நிதியக் கணக்கு** | ரூ. ச. |
|---|---|
| 2022 **ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி** | 96,332,347 |
| **கணக்காய்வுக் கட்டணப் பற்றாக்குறை ஒதுக்கீடுகளுக்கான சரிசெய்தல்கள்.** | (161,400) |
| **2022 நிதிநிலைக் கூற்றுக்கள் தொடர்பில் மீளவும் தயாரிக்கப்பட்ட மீதி** | 96,170,947 |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான**

**பேரேட்டுப் பதிவுகள்**

| திகதி | விளக்கம் | உறுதிச்சீட்டு இல. | DR | CR |
|---|---|---|---|---|
| 1/1/2024 | திரண்ட நிதியம் - Dr | | 4,140 | |
| | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு | | | 4,140 |
| | (2023 - கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் திருத்தம் செய்தல். ) | | | |
| 1/1/2024 | நிலையான வைப்பு (FD 90309500) - Dr | | 242,037 | |
| | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309500) | | | 242,037 |
| | (நிலையான வைப்புக்கான வட்டியினைச் சேர்க்காது திருத்தம் செய்தல்) | | | |
| 1/1/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309500) - Dr | | 22,758 | |
| | திரண்ட நிதியம் | | | 22,758 |
| | (2023 - நிலையான வைப்பு வட்டிக்கான ஒதுக்கீட்டின் கீழ் திருத்தம் செய்தல்) | | | |
| 1/1/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309752) - Dr | | 1,021,575 | |
| | திரண்ட நிதியம் | | | 1,021,575 |
| | (2023 - நிலையான வைப்பு வட்டிக்கான ஒதுக்கீட்டின் கீழ் திருத்தம் செய்தல்) | | | |
| 1/1/2024 | NSPD நடைமுறைக் கணக்கு - BOC 2938104 - Dr | | 3,625,278 | |
| | வீடமைப்பு நடைமுறைக் கணக்கு - BOC 7040561 - Dr | | 5,446,168 | |
| | கணனிகள் மற்றும் IT உபகரணங்கள் - செலவு - Dr | | 4,117,485 | |
| | அலுவலகத் தளபாடங்கள் - செலவு - Dr | | 279,926 | |
| | நிலையான வைப்பு (FD 90309500) - Dr | | 2,242,037 | |
| | நிலையான வைப்பு (FD 90309752) - Dr | | 5,000,000 | |
| | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309500) - Dr | | 22,758 | |
| | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309752) - Dr | | 1,021,575 | |
| | சுப்பிரி வாசான லொத்தரிலிருந்து கிடைக்கக்கூடிய - Dr | | 225,104,617 | |
| | கணனிகள் மற்றும் IT உபகரணங்கள்t - திரட்டப்பட்ட தேய்மானம் | | | 1,557,352 |
| | அலுவலகத் தளபாடங்கள் - திரட்டப்பட்ட தேய்மானம் | | | 181,394 |
| | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு | | | 162,840 |
| | 2023.12.31 அன்றுள்ளவாறான திரண்ட நிதியம் 31.12.23 | | | 244,958,260 |
| | முன் கொண்டு செல்லப்பட்ட கடந்த ஆண்டின் மீதிகள் | | | |
| 12/31/2024 | அலுவலகத் தளபாடங்கள் தேய்மானம் - Dr | | 14,780 | |
| | அலுவலகத் தளபாடங்கள் - திரட்டப்பட்ட தேய்மானம் | | | 14,780 |
| | (அலுவலகத் தளபாடங்களின் வருடாந்தத் தேய்மானத்தினைப் பதிவு செய்தல்) | | | |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான**

**பேரேட்டுப் பதிவுகள்**

| திகதி | விளக்கம் | உறுதிச்சீட்டு இல. | DR | CR |
|---|---|---|---|---|
| 12/31/2024 | கணனிகள் மற்றும் IT உபகரணங்கள் - தேய்மானம் - Dr | | 384,020 | |
| | கணனிகள் மற்றும் IT உபகரணங்கள் - திரட்டப்பட்ட தேய்மானம் | | | 384,020 |
| | (கணனிகள் மற்றும் IT உபகரணங்களின் வருடாந்தத் தேய்மானத்தினை அறிக்கையிடுதல்) | | | |
| 12/31/2024 | கணக்காய்வுக் கட்டணம் - Dr | | 162,840 | |
| | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு | | | 162,840 |
| | (2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணத்தின் ஒதுக்கீட்டினைப் பதிவு செய்தல். | | | |
| 12/31/2024 | தொலைசிக் கட்டணங்கள் - Dr | | 1,206 | |
| | திரட்டப்பட்ட தொலைசிக் கட்டணங்கள் | | | 1,206 |
| | (2024 திசம்பர் மாதத்திற்கான திரட்டப்பட்ட தொலைபேசிக் கட்டணங்களின் ஒதுக்கீட்டினைப் பதிவு செய்தல். | | | |
| 12/31/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309752) - Dr | | 279,795 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 90309752) | | | 279,795 |
| | (2024 ஆம் ஆண்டுக்கான நிலையான வைப்பு வட்டியின் பெறத்தக்கவைகளினைப் பதிவு செய்தல்.) | | | |
| 12/31/2024 | நிலையான வைப்பு (FD 90309752) - Dr | | 1,301,370 | |
| | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி ((FD 90309752) | | | 1,301,370 |
| | (நிலையான வைப்புக்கான வட்டியினைப் பதிவு செய்தல்) | | | |
| 12/31/2024 | நிலையான வைப்பு (FD 92521901) - Dr | | 6,301,370 | |
| | நிலையான வைப்பு (FD 90309752) | | | 6,301,370 |
| | 90309752 என்ற நிலையான வைப்பின் பழைய நிலையான வைப்பினைக் கொண்டு புதிய நிலையான வைப்பினை ஆரம்பிப்பதைப் பதிவு செய்தல்) | | | |
| 12/31/2024 | நிலையான வைப்பு (FD 90309500) - Dr | | 197,046 | |
| | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309500) | | | 22,758 |
| | நிலையான வைப்பு வட்டி (FD 90309500) | | | 174,288 |
| | (நிலையான வைப்புக்கான இறுதிப் புதுப்பித்தலின் வட்டியினைச் சேர்த்தல்) | | | |
| 12/31/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 90309500) - Dr | | 21,045 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 90309500) | | | 21,045 |
| | (2024 ஆம் ஆண்டுக்கான நிலையான வைப்பு வட்டியின் பெறத்தக்கவைகளினைப் பதிவு செய்தல்.) | | | |
| 12/31/2024 | நிலையான வைப்பு (FD 92338154) - Dr | | 124,893 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 92338154) | | | 124,893 |
| | (நிலையான வைப்புக்கான இறுதிப் புதுப்பித்தலின் வட்டியினைச் சேர்த்தல்) | | | |
| 12/31/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 92338154) - Dr | | 18,334 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 92338154) | | | 18,334 |
| | (2024 ஆம் ஆண்டுக்கான நிலையான வைப்பு வட்டியின் பெறத்தக்கவைகளினைப் பதிவு செய்தல்.) | | | |

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்**

**திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான பேரேட்டுப் பதிவுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 12/31/2024 | நிலையான வைப்பு (FD 92521901) - Dr | | 340,513 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 92521901) | | | 340,513 |
| | (நிலையான வைப்புக்கான இறுதிப் புதுப்பித்தலின் வட்டியினைச் சேர்த்தல்) | | | |
| 12/31/2024 | கிடைக்கக்கூடிய நிலையான வைப்பு வட்டி (FD 92521901) - Dr | | 5,618 | |
| | நிலையான வைப்பு வட்டி (FD 92521901) | | | 5,618 |
| | (2024 ஆம் ஆண்டுக்கான நிலையான வைப்பு வட்டியின் பெறத்தக்கவைகளினைப் பதிவு செய்தல்.) | | | |
| 12/31/2024 | அரச மானியம் -Dr | | 50,500,000 | |
| | சுப்பிரி வானா மானியம் -Dr | | 152,852,928 | |
| | Disable Person Empowerment Programme (JOB) -Dr | | 2,565,000 | |
| | நிலையான வைப்பு வட்டி - FD 90309500 | | 195,332 | |
| | நிலையான வைப்பு வட்டி - FD 90309752 | | 279,795 | |
| | நிலையான வைப்பு வட்டி - FD 92338154 | | 143,227 | |
| | நிலையான வைப்பு வட்டி - FD 92521901 | | 346,131 | |
| | பிற கிடைப்பனவுகள் -Dr | | 322,078 | |
| | வீடமைப்பு மற்றும் மலசலகூட உதவி | | | 33,765,362 |
| | உதவிசார் கருவிகள் | | | 11,468,971 |
| | சர்வதேச அங்கவீனர் தினம் (2023.12.01) | | | 529,962 |
| | மருத்துவ உதவி | | | 16,158,903 |
| | சுய தொழில் | | | 6,841,309 |
| | கல்விசார் உதவி | | | 11,740,747 |
| | திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம் | | | 389,399 |
| | சுய உதவி தன்னார்வ அமைப்பு | | | 691,600 |
| | அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில் | | | 2,565,000 |
| | அச்சு வெளியீடு மற்றும் பிற ஊடகங்கள் | | | 259,750 |
| | பிற செலவு | | | 1,733,548 |
| | அலுவலகத் தளபாடங்கள் - தேய்மானம் | | | 14,780 |
| | கணனிகள் மற்றும் IT உபகரணங்கள் தேய்மானம் | | | 384,020 |
| | கணக்காய்வுக் கட்டணம் | | | 162,840 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | | | 24,177 |
| | திரண்ட நிதியம் | | | 120,474,123 |
| | (திரண்ட நிதியத்திற்கு வருவாய் மற்றும் செலவுகள் மாற்றப்படுவதைப் பதிவு செய்தல்) | | | |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } එල්එස්ඩබ/ඩී/එන්එස්පිඩී/එෆ්එස්/2024

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2025 මැයි 27 දින

සභාපති
ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික මහලේකම් කාර්යාලය

**ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික මහලේකම් කාර්යාලයේ 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව**

---

## 1. මූල්‍ය ප්‍රකාශන

### 1.1 තත්ත්වාගණනය කළ මතය

ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික මහලේකම් කාර්යාලයේ 2024 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්ය සාධන ප්‍රකාශනය, හිමිකම් වෙනස්වීමේ ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ ප්‍රමාණාත්මක ගිණුම්කරණ ප්‍රතිපත්ති වලට අදාළ තොරතුරුද ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවලට අදාළ සටහන්වලින් සමන්විත 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 (1) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ සහ 1971 අංක 38 දරන මුදල් පනතේ විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මාගේ වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලැබේ.

මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණු වලින් වන බලපෑම හැර, මහලේකම් කාර්යාලයේ මූල්‍ය ප්‍රකාශන තුළින් 2024 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය ක්‍රියාකාරිත්වය හා මුදල් ප්‍රවාහ ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශයේ ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

### 1.2 තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම

(අ) ජාතික ලොතරැයි මණ්ඩලය විසින් පවත්වාගෙන යන සුපිරි වාසනා ලොතරැයි මාසික ආදායමින් සියයට 5 ක් මහා භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව හරහා නිවාස ආධාර වෙනුවෙන් ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික මහලේකම් කාර්යාලය වෙත වාර්ෂිකව ප්‍රදානයක් ලැබිය යුතු අතර ඒ අනුව 2022 සිට 2024 වර්ෂය දක්වා රු. 409,422,400 ක් ආදායම් ලෙස හඳුනාගෙන අදාළ වර්ෂයන්හිදී ගිණුම් ගත කර තිබුණි. නමුත් එම ලැබිය යුතු ප්‍රදාන අදාළ වර්ෂයේ දී ආදායමට ගැනීමේ දී ආබාධිත මහලේකම් කාර්යාලය විසින් අනුගමනය කරන ගිණුම්කරණ ප්‍රතිපත්තිය කුමක්ද යන්න ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිත අංක 11හි 107 (අ) ප්‍රකාරව මූල්‍ය ප්‍රකාශව වල හෙළිදරව් කර නොතිබුණි. සමාලෝචිත වර්ෂය අවසාන වන විට ලැබිය යුතු සුපිරි වාසනා ලොතරැයි ප්‍රදානවල 2022 සිට 2024 වර්ෂය දක්වා තව දුරටත් ලැබී නොමැති ප්‍රදානවල එකතුව රු.349,602,545 ක් වී තිබුණි.

(ආ) සමාජ සේවා දෙපාර්තමේන්තුව වෙත පැවරීමක් සහිත අකුරැස්ස ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශයේ දියලපේ බුම්මලගොඩවත්ත නැමැති හෙක්ටයාර 1.6188 ක ඉඩමක ලෝක බැංකු ණය වශයෙන් ලද

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.naosl.gov.lk

රු.මිලියන 98.9 ක් වැය කර පූර්ව ළමාවිය සංවර්ධන මධ්‍යස්ථානයක් ඉදිකර තිබූ අතර අදාල වත්කම මූල්‍ය ප්‍රකාශනවල හෙළිදරව් කර නොතිබුණි.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මෙම විගණන ප්‍රමිති යටතේ වූ මාගේ වගකීම, මෙම වාර්තාවේ මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම යන කොටසේ තවදුරටත් විස්තර කර ඇත. මාගේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනමක් සැපයීම උදෙසා මා විසින් ලබාගෙන ඇති විගණන සාක්ෂි ප්‍රමාණවත් සහ උචිත බව මාගේ විශ්වාසයයි.

**1.3 මහලේකම් කාර්යාලයේ 2024 වාර්ෂික වාර්තාවේ ඇතුළත් අනෙකුත් තොරතුරු.**

මෙම විගණන වාර්තාවේ දිනට පසුව මට ලබා දීමට බලාපොරොත්තු වන මහලේකම් කාර්යාලයේ 2024 වාර්ෂික වාර්තාවේ ඇතුළත් කර ඇති නමුත් මූල්‍ය ප්‍රකාශන සහ ඒ පිළිබඳව වූ මගේ විගණන වාර්තාවේ ඇතුළත් නොවන තොරතුරු, අනෙකුත් තොරතුරු යන්නෙන් අදහස් වේ . මෙම අනෙකුත් තොරතුරු සඳහා කළමනාකරණය වගකිව යුතුය.

මූල්‍ය ප්‍රකාශන සම්බන්ධයෙන් වූ මගේ මතයෙන් අනෙකුත් තොරතුරු ආවරණය නොකරන අතර මම ඒ පිළිබඳ කිසිදු ආකාරයක සහතිකවීමක් හෝ මතයක් ප්‍රකාශ නොකරමි.

මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ මගේ විගණනයට අදාළව, මගේ වගකීම වන්නේ ඉහත හඳුනාගත් අනෙකුත් තොරතුරු ලබා ගත හැකි වූ විට කියවීම සහ එසේ කිරීමේදී අනෙකුත් තොරතුරු මූල්‍ය ප්‍රකාශන සමඟ හෝ විගණනයේදී හෝ වෙනත් ආකාරයකින් ලබාගත් මගේ දැනුම අනුව ප්‍රමාණාත්මක වශයෙන් නොගැලපෙනවාද යන්න සලකා බැලීමයි.

මෙම විගණන වාර්තාවේ දිනට පෙර මා ලබාගත් අනෙකුත් තොරතුරු මත හා මා විසින් කරන ලද කාර්යයන් මත පදනම්ව, මෙම අනෙකුත් තොරතුරු ප්‍රමාණාත්මක වශයෙන් වැරදි ලෙස දක්වා ඇති බව මම නිගමනය කරන්නේ නම්, එම කරුණ මා විසින් වාර්තා කිරීමට අවශ්‍ය වේ. මේ සම්බන්ධයෙන් මට වාර්තා කිරීමට කිසිවක් නැත.

මහලේකම් කාර්යාලයේ 2024 වාර්ෂික වාර්තාව කියවන විට, එහි ප්‍රමාණාත්මක වරදවා දැක්වීම් ඇති බව මම නිගමනය කළහොත්, නිවැරදි කිරීම සඳහා පාලනය කරන පාර්ශවයන් වෙත එම කරුණු සන්නිවේදනය කළ යුතුය. තව දුරටත් නිවැරදි නොකළ වරදවා දැක්වීම් තිබේ නම්, ඒවා ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 (6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මා විසින් යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලබන වාර්තාවට ඇතුළත් කරනු ඇත.

**1.4 මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ කළමනාකරණයේ සහ පාලනය කරන පාර්ශවයන්ගේ වගකීම**

මෙම මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශයේ ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව පිළියෙල කිරීම හා සාධාරණ ලෙස ඉදිරිපත් කිරීම සහ වංචා හෝ වැරදි හේතුවෙන් ඇතිවිය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවනු පිණිස අවශ්‍ය වන අභ්‍යන්තර පාලනයන් තීරණය කිරීම කළමනාකරණයේ වගකීම වේ.

මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමේදී, මහලේකම් කාර්යාලය අඛණ්ඩව පවත්වාගෙන යාමේ හැකියාව තීරණය කිරීම කළමනාකරණයේ වගකීමක් වන අතර, කළමනාකාරිත්වය මහලේකම් කාර්යාලය ඈවර කිරීමට අදහස් කරන්නේ නම් හෝ වෙනත් විකල්පයක් නොමැති විටදී මෙහෙයුම් නැවැත්වීමට කටයුතු කරන්නේ නම් හැර අඛණ්ඩ පැවැත්මේ පදනම මත ගිණුම් තැබීම හා මහලේකම් කාර්යාලයේ අඛණ්ඩ පැවැත්මට අදාළ කරුණු අනාවරණය කිරීමද කළමනාකරණයේ වගකීමකි.

මහලේකම් කාර්යාලයේ මූල්‍ය වාර්තාකරණ ක්‍රියාවලිය සම්බන්ධව පරීක්ෂා කිරීමේ වගකීම, පාලනය කරන පාර්ශවයන් විසින් දරනු ලබයි.

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16 (1) උප වගන්තිය ප්‍රකාරව, මහලේකම් කාර්යාලයේ වාර්ෂික සහ කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වාගෙන යා යුතුය.

### 1.5 මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම

සමස්තයක් ලෙස මූල්‍ය ප්‍රකාශන, වංචා සහ වැරදි නිසා ඇතිවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොර බවට සාධාරණ තහවුරුවක් ලබාදීම සහ මාගේ මතය ඇතුලත් විගණන වාර්තාව නිකුත් කිරීම මාගේ අරමුණ වේ. සාධාරණ සහතිකවීම උසස් මට්ටමේ සහතිකවීමක් වන නමුත්, ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනය සිදු කිරීමේදී එය සැමවිටම ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් අනාවරණය කරගන්නා බවට වන තහවුරු කිරීමක් නොවනු ඇත. වංචා සහ වැරදි තනි හෝ සාමූහික ලෙස බලපෑම නිසා ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇතිවිය හැකි අතර, එහි ප්‍රමාණාත්මක භාවය මෙම මූල්‍ය ප්‍රකාශන පදනම් කරගනිමින් පරිශීලකයන් විසින් ගනු ලබන ආර්ථික තීරණ කෙරෙහි වන බලපෑම මත රඳා පවතී.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනයේ කොටසක් ලෙස මා විසින් විගණනයේදී වෘත්තීය විනිශ්චය සහ වෘත්තීය සැකමුසුබවින් යුතුව ක්‍රියා කරන ලදී. මා විසින් තවදුරටත්,

- ප්‍රකාශ කරන ලද විගණන මතයට පදනමක් සපයා ගැනීමේදී වංචා හෝ වැරදි හේතුවෙන් මූල්‍ය ප්‍රකාශනවල ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇතිවීමේ අවදානම් හඳුනාගැනීම හා තක්සේරු කිරීම සඳහා අවස්ථාචෝචිතව උචිත විගණන පරිපාටි සැලසුම් කර ක්‍රියාත්මක කරන ලදී. වරදවා දැක්වීම හේතුවෙන් සිදුවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් සිදුවන බලපෑමට වඩා වංචාවකින් සිදුවන්නා වූ බලපෑම ප්‍රබල වන්නේ ඒවා දුස්සන්ධානයෙන්, ව්‍යාජ ලේඛන සැකසීමෙන්, චේතනාන්විත මඟහැරීමෙන්, වරදවා දැක්වීමෙන් හෝ අභ්‍යන්තර පාලනයන් මඟ හැරීමෙන් වැනි හේතු නිසා වන බැවිනි.

- අභ්‍යන්තර පාලනයේ සඵලදායීත්වය පිළිබඳව මතයක් ප්‍රකාශ කිරීමේ අදහසින් නොවුවද, අවස්ථාචෝචිතව උචිත විගණන පරිපාටි සැලසුම් කිරීම පිණිස අභ්‍යන්තර පාලනය පිළිබඳව අවබෝධයක් ලබාගන්නා ලදී.

- භාවිතා කරන ලද ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවල උචිතභාවය, ගිණුම්කරණ ඇස්තමේන්තුවල සාධාරණත්වය සහ කළමනාකරණය විසින් කරන ලද සම්බන්ධිත හෙළිදරව් කිරීම් අගයන ලදී.

- සිද්ධීන් හෝ තත්ත්වයන් හේතුවෙන් මහලේකම් කාර්යාලයේ අඛණ්ඩ පැවැත්ම පිළිබඳ ප්‍රමාණාත්මක අවිනිශ්චිතතාවයක් තිබේද යන්න සම්බන්ධයෙන් ලබාගත් විගණන සාක්ෂි මත පදනම්ව ගිණුම්කරණය සඳහා ආයතනයේ අඛණ්ඩ පැවැත්ම පිළිබඳ පදනම යොදා ගැනීමේ අදාලත්වය නිරණය කරන ලදී. ප්‍රමාණවත් අවිනිශ්චිතතාවයක් ඇති බවට මා නිගමනය කරන්නේ නම් මූල්‍ය ප්‍රකාශනවල ඒ සම්බන්ධයෙන් වූ හෙළිදරව්කිරීම් වලට මාගේ විගණන වාර්තාවේ අවධානය යොමු කළ යුතු අතර, එම හෙළිදරව්කිරීම් ප්‍රමාණවත් නොවන්නේ නම් මාගේ මතය විකරණය කළ යුතුය. කෙසේ වුවද, අනාගත සිද්ධීන් හෝ තත්ත්වයන් මත අඛණ්ඩ පැවැත්ම අවසන් වීමට හැකිය.

- මූල්‍ය ප්‍රකාශනවල ව්‍යුහය හා අන්තර්ගතය සඳහා පාදක වූ ගනුදෙනු හා සිද්ධීන් උචිත හා සාධාරණව ඇතුළත් වී ඇති බව සහ හෙළිදරව් කිරීම් ඇතුලත් මූල්‍ය ප්‍රකාශනවල සමස්ථ ඉදිරිපත් කිරීම අගයන ලදී.

මාගේ විගණනය තුළදී හදුනාගත් වැදගත් විගණන සොයාගැනීම්, ප්‍රධාන අභ්‍යන්තර පාලන දුර්වලතා හා අනෙකුත් කරුණු පිළිබඳව පාලනය කරනු ලබන පාර්ශවයන් දැනුවත් කරමි.

## 2. වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳ වාර්තාව

2.1 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ පහත සඳහන් අවශ්‍යතාවයන් සම්බන්ධයෙන් විශේෂ ප්‍රතිපාදන ඇතුලත් වේ.

2.1.1 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 6 (1) (ඇ) (iii) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව මහලේකම් කාර්යාලයේ මූල්‍ය ප්‍රකාශන ඉකුත් වර්ෂය සමඟ අනුරූප වේ.

2.1.2 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 6 (1) (ඇ) (iv) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව ඉකුත් වර්ෂයේදී මා විසින් සිදුකරන ලද නිර්දේශයන් ඉදිරිපත් කරන ලද මූල්‍ය ප්‍රකාශනවල ඇතුළත්ව ඇත.

2.2 අනුගමනය කරන ලද ක්‍රියාමාර්ග සහ ලබා ගන්නා ලද සාක්ෂි මත හා ප්‍රමාණාත්මක කරුණුවලට සීමා කිරීම තුල, පහත සඳහන් ප්‍රකාශ කිරීමට තරම් කිසිවක් මාගේ අවධානයට ලක් නොවිය.

2.2.1 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 12 (ඇ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව මහලේකම් කාර්යාලයේ පාලක මණ්ඩලයේ යම් සාමාජිකයෙකුට මහලේකම් කාර්යාලය සම්බන්ධවී යම් ගිවිසුමක් සම්බන්ධයෙන් සෘජුව හෝ අන්‍යාකාරයකින් සාමාන්‍ය ව්‍යාපාරික තත්වයෙන් බැහැරව සම්බන්ධයක් ඇති බව.

2.2.2 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 12 (ඊ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව පහත සඳහන් නිරීක්ෂණ හැර යම් අදාල ලිඛිත නීතියකට මහලේකම් කාර්යාලයේ පාලක මණ්ඩලය විසින් නිකුත් කරන ලද වෙනත් පොදු හෝ විශේෂ විධානවලට අනුකූල නොවන ලෙස ක්‍රියා කර ඇති බව.

| නීති, රීති හා රෙගුලාසිවලට යොමුව | අනුකූල නොවීම |
|---|---|
| 1996 අංක 28 දරන ආබාධ සහිත තැනැත්තන්ගේ අයිතිවාසිකම් ආරක්ෂා කිරීමේ පනතේ I වන කොටස 2 වන වගන්තිය | ආබාධ සහිත තැනැත්තන් සඳහා ජාතික සභාවක් පිහිටුවා තිබුණි. 2024 වර්ෂයේදී ජාතික සභාව විසින් ආබාධ සහිත භාවය පිළිබඳ ශ්‍රී ලංකාවේ ජාතික ක්‍රියාකාරී සැලැස්ම සැකසීම, ආබාධිතත්ව කළමනාකරණ තොරතුරු පද්ධතිය (DMIS) සැකසීම, ආබාධ සහිත තැනැත්තන් සඳහා සුදුසු රක්ෂණ ක්‍රමවේදයක් සකස් කිරීම, මෙන්ම භාවිතා කරන සහායක තාක්ෂණික උපකරණ සහ බෙහෙත් ඖෂධ සඳහා පනවා ඇති බදු ඉවත් කිරීම හෝ බදු සහන ලබාදීම අතුළුව ගනු ලැබූ වැදගත් තීරණ 15 ක් මෙම වාර්තාවේ දින දක්වා ක්‍රියාත්මක කිරීමට නොහැකි වී තිබුණි. |

2.2.3 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (උ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව මහ ලේකම් කාර්යාලයේ බලතල , කර්තව්‍ය සහ කාර්යයන්ට අනුකූල නොවන ලෙස කටයුතු කර ඇති බව

2.2.4 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (ඌ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව පහත සඳහන් නිරීක්ෂණ හැර මහ ලේකම් කාර්යාලයේ සම්පත් සකසුරුවම් ලෙස, කාර්යක්ෂම ලෙස සහ

ඵලදායී ලෙස කාලසීමාවන් තුළ අදාළ නීතිරීති වලට අනුකූලව ප්‍රසම්පාදනය කර භාවිතා කර නොමැති බව.

(අ) සමාලෝචිත වර්ෂයේ ආදායම් ලෙස ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික අරමුදලට රු.152,852,928 ක් ලැබිය යුතු වුවත් ඉන් රු.28,355,000 ක් පමණක් ලැබී තිබීම හේතුවෙන් ආබාධ සහිත තැනැත්තන් සඳහා නිවාස ආධාර වැඩසටහනේ අරමුණ ඉටුකර ගැනීමට නොහැකි වී තිබුණි.

(ආ) සමාලෝචිත වර්ෂයේ ක්‍රියාත්මක සැලැස්ම අනුව ඇස්තමේන්තු ගත ආදායම රු. මිලියන 170 කින් කිසිම ආදායම් මාර්ගයක් නොමැති, ඉඩමක් සඳහා හිමිකම් ඇති නමුත් නිවසක් අහිමි ආබාධ සහිත තැනැත්තන් සඳහා නිවසක් තනාදීම සඳහා රු.500,000ක් හෝ තිබෙන නිවස අලුත් වැඩියා කර ගැනීම සඳහා රු.250,000 ක ආධාර මුදලක් සහ සනීපාරක්ෂක පහසුකම් ලබාදීම සඳහා උපරිම රු100,000ක ආධාර මුදලක් වශයෙන් ප්‍රතිලාභීන් 300 දෙනෙක් සඳහා නිවාස ආධාර වශයෙන් රු. මිලියන 150 ක්ද, ප්‍රතිලාභීන් 200 දෙනෙකුට සනීපාරක්ෂක උපකරණ ආධාර වශයෙන් රු. මිලියන 20 ක්ද ලබා දීමට සැලසුම්කර තිබුණි. වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව සහ ක්‍රියාත්මක සැලැස්මට අනුකූලව ඉදිරිපත් කරන ලද ප්‍රගතිය පිළිබඳ වාර්තාව අනුව ප්‍රතිලාභීන් 205 දෙනෙකු සඳහා රු. මිලියන 27.46 ක නිවාස ආධාර සහ ප්‍රතිලාභීන් 69 දෙනකුට රු. මිලියන 07 ක සනීපාරක්ෂක උපකරණ ලබා දී තිබුණි. ඒ අනුව ඇස්තමේන්තු කරන ලද ආදායම උපරිම ආකාරයෙන් ප්‍රතිලාභීන්ගේ ඉල්ලීම් සඳහා උපයෝජනය කිරීමට නොහැකි වී තිබුණි.

ජී.එච්.ඩී. ධර්මපාල
විගණකාධිපති(වැ.බ.)

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் 2024 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களினை உள்ளடக்கி அதன் செயற்பாடுகள் தொடர்பிலான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் தவிசாளருக்கு முன்வைக்கப்படும் விரிவான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை தொடர்பிலான மறுமொழிகள்**

### 1.4.1 நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திலுள்ள வரையறுக்கப்பட்ட பணியாளர்களினைப் பயன்படுத்தி ஆகக்கூடிய வகையில் "நன்கு திட்டமிடப்பட்ட' உள்ளகக் கணக்கியல் கட்டுப்பாட்டுத் திட்டமொன்று பேணப்பட்டு வருகிறது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

### 1.4.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கியல் தரநிலைகளுடன் இணங்காமை.

தேசிய லொத்தர் சபையினால் முன்னெடுக்கப்படும் சுப்பிரி வாசனா லொத்தர் மாதாந்த வருமானத்தில் நூற்றுக்கு 5 (5%) பொதுத் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினூடாக வீடமைப்பு உதவிக்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திற்கு வருடாந்த மானியம் கிடைத்துவருவதுடன், அதன் பிரகாரம் 2022 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா. 409,422,400 வருமானமாக அடையாளம் காணப்பட்டு உரிய வருடத்தில் கணக்கிடப்பட்டிருந்தது. இருப்பினும் கிடைக்கவேண்டிய மானியங்களினை உரிய ஆண்டின் வருமானமாகக் கொள்ளும்போது அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கை எவ்வாறானது என்பது தொடர்பில் இலங்கைப் பொதுத் துறைக் கணக்கியல் தரநிலை இலக்கம் 11 இன் 107 (அ) இன் பிரகாரம் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் நிறைவில் கிடைக்கவேண்டிய சுப்பிரி வாசனா லொத்தர் மானியங்களில் 2022 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை மேலும் கிடைக்கப் பெறாத நிலுவையிலுள்ள மானியங்களின் மொத்தம் ரூபா. 349,602,545 ஆகக் காணப்பட்டது.

2024.12.31 ஆந் திகதி கிடைக்கவேண்டிய "சுப்பிர் வாசனா" லொத்தர் மானியங்கள் திரட்டல் அடிப்படையில் இறுதிக் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதுடன், அது தொடர்பில் கணக்கியல் அறிக்கைகளில் குறிப்பிடுவது தவறவிடப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு கணக்கியல் தரநிலைகளின் பிரகாரம்

எதிர்வரும் காலங்களில் கணக்குகளில் தேவையான வெளிப்பாடுகளினைச் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024/06/30 ஆந் திகதியன்று கிடைக்கவேண்டிய ரூபா. 276,544,466.97 சுப்பிரி வாசனா லொத்தர் மானியங்களின் மொத்தப் பெறுமதியினைக் குறிப்பிட்டு அமைச்சின் செயலாளரின் ஒப்பத்துடன், 2024/08/15 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம், திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு நிதியினைக் கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்குப் பதிலளிக்கும் விதமாக 2025.01.08 ஆந் திகதி ரூபா. 26.65 மில்லியன் மற்றும் 2025.07.18 ஆந் திகதி ரூபா. 33.85 மில்லியன் நிதி அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதிய வீடமைப்பு உதவிக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல எதிர்வரும் காலத்தில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினூடாக நிதியினைக் கோரும்போது முழுமையான நிலுவைப் பணத்தினைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

MRDSS&CE/ACC/01/75 என்ற எனது இலக்க மற்றும் 2025.06.12 ஆந் திகதி முழுமையான நிலுவைப் பணத்தினைக் கோரி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு மீளவும் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

### 1.4.3 கணக்கியல் குறைபாடுகள்

சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைப்புடன் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவின் தியலபே பூம்மலகொடவத்த என்ற பெயரினைக் கொண்ட 1,6188 கெக்டயரினைக் கொண்ட காணி, உலக வங்கியின் கடனாகப் பெறப்பட்ட ரூபா. 98.9 மில்லியன் செலவு செய்யப்பட்டு முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்திற்கு கட்டிடமொன்றினை நிர்மாணித்து 2023 யூன் 23 ஆந் திகதி தலைமைச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும் உரிய சொத்துக் கணக்குகளில் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் இறுதிக் கணக்கு தயாரிக்கப்படுவது, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்தினூடாக இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரமேயாகும். இக்கட்டித்தினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா. 48 மில்லியன் என்பதுடன், அதற்கான ஒப்பந்தம் வழங்கும் பத்திரத்தின் பிரதியொன்றினை இத்துடன் முன்வைக்கின்றேன். (இணைப்பு 1). இந்நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது, உலக வங்கி உதவியின் கீழான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கருத்திட்டத்தினூடாகவேயாகும். அதன் சகல

கொள்முதற் செயற்பாடுகள் மற்றும் கொடுப்பனவுச் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது அக் கருத்திட்டத்தினூடாகவேயாகும் என்பதுடன், எமது நிறுவனத்தின் நிதியத்தினூடாக எவ்வித கொடுப்பனவும் இடம்பெற்றிருக்கவில்லை. அக்கட்டிடம் அமைக்கப்பெற்றுள்ள காணி சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தானது என்பதால் காணியின் உரித்தினைக் கொண்டிராத கட்டிடத்தின் சட்டபூர்வமான உரிமை அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயலகத்திற்கு இல்லை. ஆதலால் இக்கட்டிடம் தொடர்பிலான எமது நிறுவனத்தின் இறுதிக் கணக்குக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இக்கட்டித்தினைக் கொண்ட காணி சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தானது என்பதால் 2025.05.22 ஆந் திகதி அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினால் அதில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இக்கட்டிடம் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**1.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு முறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.** அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் தேசிய சபையினால் அங்கவீன இயல்பு தொடர்பிலான இலங்கையின் தேசியச் செயற்றிட்டத்தினை தயாரித்தல், அங்கவீனர் முகாமைத்துவத் தகவல் திட்டத்தினைத் (DMIS) தயாரித்தல், அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பொருத்தமான காப்புறுதித் திட்டமொன்றினைத் தயாரித்தல், அங்கவீனமுற்ற நபர்கள் பயன்படுத்தும் உதவித் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் மருந்துகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளினை நீக்குதல் அல்லது வரி விலக்களித்தல் உட்பட எடுக்கப்பட்டுள்ள 15 முக்கியமான தீர்மானங்களினை, இவ் அறிக்கை வெளியிடப்பட்ட தினம் தொடக்கம் அமுலாக்குவதற்கு இயலாது போயுள்ளது.

(அ.)

I அங்கவீனமுற்ற நபர்களுக்கான சைகை மொழிச் சட்ட வரைவில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

சைகை மொழிச் சட்டவரைவு தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்ட வரைவு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவைத் தீர்மானம் 2025.06.02 ஆந் திகதியன்று பெறப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள சைகை மொழிச் சட்ட வரைவுக்கு அவதானிப்புக்களினை வழங்குவதற்கு தேசிய சபை அங்கத்தவர்

திரு. பிரயன் சுசந்த அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் இணக்கப்பாடு கிடைத்துள்ளமையினால் 2025.07.25 ஆந் திகதி வரையில், சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தேசிய சபை அவதானிப்புக்களினை வழங்குவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## II அரச உத்தியோகத்தர்களுக்குச் சைகை மொழி மற்றும் பிரெய்ல் மொழிகள் மேலதிக பாடங்களினை நிறுவுதல்.

அரச உத்தியோகத்தர்களுக்காக 60 மணி நேர சைகை மொழிப் பாடநெறியினை நடாத்துவதற்கு செயற்றிட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு வருகிறது. 2025 - 2029 மூலோபாயத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தினுன் இரு பாடநெறிகளினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரச உத்தியோகத்தர்களுக்காக இப்பாடநெறி 2025.08.14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் சகல மாவட்டங்களிலும் இப்பாடநெறியினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## III அங்கவீனர் இயல்பு தொடர்பிலான இலங்கையின் தேசியச் செயற்றிட்டத்தினைத் தயாரித்தல்.

அங்கவீனர் இயல்பு தொடர்பிலான தேசியக் கொள்கை மற்றும் தேசிய செயற்றிட்டத்தினைத் தயாரிப்பது தொடர்பில் தற்போது அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தேசிய சபை உறுப்பினர்களினையும் உள்ளடக்கி உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாக தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு குழுவொன்றும் உள்ளது. இக்குழுக்கள் கூடி தற்போது அங்கவீனர் இயல்பு தொடர்பிலான தேசியச் செயற்றிட்டம் மற்றும் கொள்கையினைத் தயாரிக்கும் செயற்பாடுகளினை ஆரம்பித்துள்ளதுடன், தேசியக் கொள்கையினைத் தயாரிப்பதை 2025 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு காலவரையறை தயாரிக்கப்பட்டுள்ளது.

## IV சைகை மொழிபெயர்ப்பாளர்களின் குழாமினை அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினுள் அமைத்தல்.

சைகை மொழிபெயர்ப்பாளர்களின் குழாமொன்றினை சமூக சேவைகள் திணைக்களத்தினுள் அமைப்பதற்கு 2022.06.28 ஆந் திகதி நடைபெற்ற தேசிய சபையில்

தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏற்கனவே சமூக சேவைகள் திணைக்களத்தினுள் இருபத்தெட்டுப் பேரினைக் கொண்ட சைகை மொழிபெயர்ப்பாளர் குழாமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

V. அங்கவீனமுற்ற நபர்களுக்கு, அங்கவீனர் என்பதைக் குறிப்பிடும் தேசிய அடையாள அட்டையொன்றினைத் தயாரித்தல்

அடையாள அட்டையினைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அங்கவீனர் தொடர்பிலான வகைப்படுத்துதல் இது வரையில் தேசிய சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒதுக்கீடுகளினைப் பெற்றுக் கொள்வதற்கு செயற்றிட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு 2026 பாதீட்டு மதிப்பீட்டுக்கு ரூபா. 10 மில்லியன் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2025-2029 மூலோபாயத் திட்டமொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

VI அங்கவீனமுற்ற நபர்கள் பயன்படுத்தும் உதவித் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் மருந்துகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளினை நீக்குதல் அல்லது வரி விலக்குகளினை வழங்குதல்.

எமது அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வுத் தினம் வரையில் இத்தீர்மானங்கள் அனைத்தினையும் நடைமுறைப்படுத்துவதற்கு இயலாதுபோயுள்ளதுடன், உதவித் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் இறக்குமதித் தீர்வைகளினை நீக்குவது குறித்து எனது இலக்க MWCA&SE/NSPD/10-1CM 3 மற்றும் 2023.12.12 ஆந் திகதிய கடிதத்தில் (இணைப்பு II) வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் TIP/TP/24/TRAM/2022 என்ற இலக்க 2024.01.05 ஆந் திகதிய கடிதத்தில் சில உதவி உபகரணங்கள் மீதான தீர்வைகளினை நீக்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது (இணைப்பு III).

VII அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயகலத்தினால் பதிவு செய்யப்படும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களினை ஒழுங்குபடுத்துவதற்கு வழிமுறையொன்றினைத் தயாரித்தல்.

தன்னார்வத் தொண்டு அமைப்புக்களினை பதிவுசெய்வதற்கான விதிமுறைகளினைத் திருத்துவதற்கு இது வரையில் தயாரிக்கப்பட்டுள்ள முன்மொழிவு சட்டவரைவாளருக்கு முன்வைக்கப்பட்டு அவரின் அவதானிப்புக்கள் பெறப்பட்டுள்ளதுடன், அவ் அவதானிப்புக்களின் பிரகாரம் பிரச்சினைகளினை அடையாளம் கண்டு அதன் பிரகாரம் முன்மொழிவு வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவரைவாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது..

VIII அங்கவீனர் முகாமைத்துவத் தகவல் திட்டத்தினைத் (DMIS) தயாரித்தல்.

சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக இடம்பெறும் ஆய்வுகளினூடாக பெறப்பட்ட தரவுகள் மற்றும் அதன் தகவல்களினை, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு பாதீட்டினூடாக ரூபா. 100 மில்லியன் ஒதுக்கீடுகள் அங்கவீனமுற்ற நபர்கள் குறித்த தரவுத் திட்டமொன்றினை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இத் தரவுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு தேசிய சபை அங்கத்தவர்களினைக் கொண்ட முழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய விவரக் குறிப்புக்களினைத் தயாரித்தல், கொள்முதல் நடவடிக்கைகளினை மேற்கொள்ளல் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை செயற்படுத்துதல் தொடர்பில் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுகாதாரம் மற்றும் பொதுசன ஊடக அமைச்சு, உயர் கல்வி அமைச்சு மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு வேலைத்திட்டம், உலக சுகாதார அமைப்பு, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, தேசிய சபை பிரதிநிதிகளுடன் ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. தரவுத் திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பிலான கடித ஆவணங்கள் தேசிய சபை நியமித்துள்ள குழுவினால் இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கொள்முதல் தொடர்பிலான குழுவொன்றினை டிஜிட்டல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, நிதி அமைச்சு, புள்ளிவிவரத் திணைக்களம், கிராமிய அபிவிருத்தி, பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு போன்றனவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்டுள்ளது.

IX **அங்கவீனமுற்ற நபர்களுக்கான லொத்தரொன்றினை அறிமுகப்படுத்துதல்.**

2023.05.22 ஆந் திகதி சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சில், லொத்தர் சபையின் தவிசாளர், அமைச்சருடன் ஆரம்பக் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டுள்ளது. புதிய லொத்தரொன்றினை அறிமுகப்படுத்துவது கடினம் எனவும், தேசிய சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து ஒரு நாள் வருமானத்தினை அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரிக்கு வழங்குவதற்கு இயலுமை காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு ஜனசெத லொத்தர் வருமானத்திலிருந்து ஒரு நாள் வருமானத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி 2023.06.21 ஆந் திகதி மற்றும் 2023.08.28 ஆந் திகதி நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தற்போது அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்கு சுப்பிரி வாசனா லொத்தர் வருமானத்தில் 5% ஊடாக நிதி வழங்கப்படுகிறது.

X **1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்குப் பதிலாக வரைவு செய்யப்பட்ட புதிய சட்டத்தினை அங்கீகரித்தல்.**

இச்சட்டவரைவு தொடர்பில் நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், 2025.04.21 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பது தொடர்பில் சட்ட வரைவு குறித்து செயற்படுவதற்கான பணி, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய சபையினால் நியமிக்கப்பட்டுள்ள உப குழுவினால் இச்சட்டம் மீளவும் வரைவு செய்யப்பட்டு வருகிறது.

XI **அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் பொருத்தமான காப்புறுதித் திட்டமொன்றினை உருவாக்குதல்.**

2024 ஆம் ஆண்டில் அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பொருத்தமான காப்புறுதித் திட்டமொன்றுக்கு முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அரச மற்றும் பிரத்தியேகக் காப்புறுதி நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 2024.08.06 ஆந் திகதி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடனும், 2024.09.04 ஆந் திகதி, ஆர்பிகோ இன்சூரன்ஸ், அலயன் இன்சூரன்ஸ்சுடனும், 2024.09.06 ஆந் திகதி யூனியன் அஸ்யூரன்ஸ் மற்றும் எச்.என்.பி அஸ்யூரன்ஸ்சுடனும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் இலங்கைக்

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தங்களின் முன்மொழிவினை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் 2025.04.11 ஆந் திகதி நடைபெற்ற தேசிய சபையின் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், அதில் சமூகப் பாதுகாப்புச் சபையினூடாக திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், சமூகப் பாதுகாப்புச சபையினூடாக பங்களிப்பு ஓய்வூதியமொன்றினை வழங்குவது தொடர்பிலான அவர்களின் முன்மொழிவும் முன்வைக்கப்பட்டது. இந்த இரு முன்மொழிவுகளினையும் 2025.06.25 ஆந் திகதி நடைபெற்ற தேசிய சபைக்கு கருத்துக்களினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.07.01 ஆந் திகதி அமைச்சின் மேலதிக செயலாளரின் (சமூகப் பாதுகாப்பு) தலைமையில், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகளுடன் அவர்களின் முன்மொழிவு குறித்து கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், இரு தரப்பினர்களினதும் கருத்துக்களினைக் கவனத்திற் கொண்டு புதிய முன்மொழிவுத் திட்டமொன்றினைத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், அதனைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒதுக்கீடுகளினை வழங்குவதற்கு 2026 பாதீட்டு மதிப்பீட்டுக்கு ரூபா. 118.5 மில்லியன் சேர்க்கப்பட்டுள்ளது.

**XII தேர்தல் செயற்பாட்டில் அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பிரதிநிதித்துவத்தினை வழங்குதல்.**

தேர்தல் செயற்பாட்டில் அங்கவீனமுற்ற நபர்களுக்கு நியமன வாய்ப்புகளினை வழங்கும்போது ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை ஒதுக்குவதற்கு எண்ணக்கருப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு மாகாண சபைகள் விவகார இராஜாங்க அமைச்சுக்கு 2024.04.29 ஆந் திகதி கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இது வரையில் பாராளுமன்றத்திற்கு அங்கவீனமுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் நடவடிக்கைக்கு அங்கவீனமுற்ற நபர்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற்றுள்ளது.

**XIII அங்கவீனமுற்ற நபர்களின் அமைப்புக்கள் மற்றும் அவர்களுக்காகச் சேவைகள்/பொருட்களினை வழங்கும் நிறுவனங்களினை முறைசார் வகையில் முன்னெடுத்தல், கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான விதிமுறைகளினைத் தயாரித்தல்.**

தன்னார்வ அமைப்புக்களினைப் பதிவு செய்வதற்கான விதிமுறைகளினைத் திருத்துவதற்கு இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ள முன்மொழிவினை சட்ட வரைஞருக்கு

முன்வைத்து அவர்களின் அவதானிப்புக்கள் பெறப்பட்டுள்ளதுடன், அவ் அவதானிப்புக்களின் பிரகாரம் பிரச்சினைகளினை அடையாளம்கண்டு அதன் பிரகாரம் முன்மொழிவினை வரைவு செய்து சட்டவரைஞருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. (மேற்குறிப்பிட்ட VII இன் மறுமொழியிலும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.)

XIV சிறு வணிக மேம்பாட்டுப் பிரிவு மற்றும் விதாதா வள நிலையங்களினூடாக இடம்பெற்றுவரும் சேவைகளில் அங்கவீனமுற்ற தொழில்முனைவோர்களினை விளைத்திறனாகச் சேர்த்துக் கொள்ளல்.

இவ் விடயம் தொடர்பாக 2023.09.05 மற்றும் 2023.10.27 ஆந் திகதிகளில் பணிப்பாளர் சிறு வணிக மேம்பாட்டுப் பிரிவுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் சிறு வணிக மேம்பாட்டுப் பிரிவின் பணிப்பாளரினால் 2023.11.06 ஆந் திகதிய கடிதத்தினூடாக, பிராந்திய மற்றும் மாவட்ட மட்டங்களில் இளைஞர்களினை வணிகத் துறைக்கு முன்வைப்பதற்கு நடாத்தப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகளுக்கு அங்கவீன இளைஞர்களினைப் பங்குபற்றுவதற்கு ஏற்கனவே வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொருளாதார வலுவூட்டலுக்கான தொழில்களினைத் தொடங்குவதற்கு அல்லது ஏற்கனவே உள்ள தொழில்களினை மேம்படுத்துவதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவி வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

XV 1476/15 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்பு வசதி (அணுகல்) ஒழுங்குவிதிகளினைத் திருத்தம் செய்தல்.

இது வரை முதற் கட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதன் மேலும் குறைபாடுகளினை நிவர்த்தி செய்தல் மற்றும் திட்டக் குறிப்புக்கள் போன்றனவற்றினை முன்னெடுத்தல் வேண்டும். அதற்குத் தேவையான மனித வளங்களினைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகிறன. இது தொடர்பில் மொரட்டுவப் பல்கலைக்கழகம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவியினைக் கோருவதற்கு தேசிய சபை தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் உதவி கோரிய கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (எனது இலக்கம் MRDSS16/19/com/2025 என்ற 2025.07.14 ஆந் திகதிய கடிதம்)

2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளினைச் சர்வதேச தரத்தின் பிரகாரம் திருத்தி இதுவரையில் ஆரம்ப வரைவொன்று

தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேலும் அதன் குறைபாடுகளினைச் சரிசெய்தல் மற்றும் திட்டக் குறிப்புகள் போன்றன சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் மொழிபெயர்ப்புக்களினைச் செய்தல் வேண்டும். அதற்குத் தேவையான மனித வளங்களினைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினதும் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் உதவியினைக் கோருவதற்கு தேசிய சபை தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் உதவி கோரும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (MRDSS16/19/com/2025 என்ற இலக்க 2025.07.14 ஆந் திகதிய கடிதத்தினூடாக). அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் வீடு கட்டுமாணத் துறையினைத் தொடரும் மாணவன் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு விளைவு ரூபா. 120,474,123 மேலதிகம் என்பதுடன், அதற்கேற்ப முந்தைய ஆண்டின் மேலதிகம் ரூபா. 147,747,119 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா. 27,272,996 சரிவொன்று அவதானிக்கப்பட்டது. இச் சரிவுக்கு சுப்பிரி வாசனா லொத்தர் வருமானம் குறைவடைதல் மற்றும் மூலதனச் செலவுகள் அதிகரிப்பு பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் ஒரு இலாபநோக்கற்ற நிறுவனம் என்பதால் வருடாந்தம் தொழிற்பாட்டு விளைவில் மேலதிகத்தினை எதிர்பார்க்கமுடியாது. திறைசேரியிமிருந்து நிதியத்திற்கு வருடாந்தம் கிடைக்கும் சகல நிதியினையும் உரிய வருடத்தினுள் செலவு செய்தல் வேண்டும். எனினும் சுப்பிரி வாசனா லொத்தர் வருமானத்திலிருந்து கிடைக்கும் நிதி உரிய வருடத்தினுள் கிடைக்காமையினால், அதனை கிடைக்க வேண்டிய வருமானமொன்றாக கணக்கிடப்படுவதால், அந்த லொத்தர் வருமானத்திலிருந்து கிடைக்க வேண்டிய நிதிக்கு ஏற்ப வருடாந்தம் தொழிற்பாட்டு விளைவுகளில் மேலதிகம் உருவாகும். ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் சுப்பிரி வாசனா லொத்தர் வருமானம் வேறுபடும் என்பதுடன், அவ்வருவாயிலிருந்து எமது நிறுவனங்களுக்கு திறைசேரியினால் விடுவிக்கப்படும் நிதியின் அளவும் வேறுபடும். “சுப்பிரி வாசனா” லொத்தரின் ஆண்டு வருமானத்திற்கும் மற்றும் அவ் வருமானத்திலிருந்து எமது நிறுவனத்திற்கு கிடைக்கும் நிதியின் அளவு

எமது நிறுவனத்தின் தாக்கத்திற்கு அப்பாற்பட்டது. அதன் பிரகாரம் வருடமொன்றுக்கு ஏற்ப பிற வருடங்களின் மேலதிகம் சரிசெய்யப்பட மாட்டாது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) மீளாய்வு ஆண்டின் வருமானமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்திற்கு ரூபா. 152,852,928 கிடைக்க வேண்டுமாயினும் அதில் ரூபா. 28,355,000 மாத்திரம் கிடைத்துள்ளது. அதன் காரணமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களினை முறையாக அடைவதற்கு முடியாது போயுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி மற்றும் மலசலகூட உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் இரண்டாவது மூன்றாவது தவணைகளினைக் கொடுப்பனவு செய்வதற்கு பிரதேச செயலாளரின் பரிந்துரைகள் கிடைக்கப் பெறும் முறைமையினைக் கவனத்துற்கொண்டு திறைசேரிகள் செயற்பாடுகள் திணைக்களத்தினூடாக கட்டுநிதி கோரப்பட்டு கிடைக்கும் கட்டுநிதியினூடாக உதவியினை வழங்குதல் இடம்பெற்று வருகிறது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்வரும் காலத்தில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய சகல நிதியினையும் கோருவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2024 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா.170 மில்லியனில், எந்தவொரு வருமானமுமற்ற காணியொன்றுக்கு உரித்தினைக்கொண்டபோதிலும் வீடொன்று இல்லாத அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடொன்றினைக் கட்டுவதற்காக ரூபா. 500,000 அல்லது இருக்கும் வீட்டினை புதுப்பிப்பதற்கு ரூபா. 250,000 உதவி நிதி மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குவதற்கு ஆகக்கூடியது ரூபா. 100,000 உதவி நிதியாக 300 பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவியாக ரூபா. 150 மில்லியனும், 200 பேருக்கு சுகாதார உபகரணங்களுக்கு உதவியாக ரூபா. 20 மில்லியனும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் 2024 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள நிதி ரூபா. 28.35 மில்லியன் மாத்திரமேயாகும். அதனூடாக 205 பயனாளிகளுக்கு ரூபா. 27.45 மில்லியன் வீடமைப்பு உதவி மற்றும் 69 பயனாளிகளுக்கு ரூபா. 7 மில்லியன் சுகாதார உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2024

ஆம் ஆண்டில் கிடைத்துள்ள சகல நிதியிலும் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன. திறைசேரியிலிருந்து போதுமானவாறு கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை ஆகக்கூடியவாறு பயனாளிகளின் கோரிக்கைக்கு பயன்படுத்துவதற்கு இயலாது போயுள்ளது. 2025 ஆம் ஆண்டில் வீடமைப்பு உதவி மற்றும் மலசலகூட உதவியினை வழங்குவதற்குப் பொருத்தமான அங்கவீனமுற்ற நபர்களினை அடையாளம்கண்டு விண்ணப்பங்களினை முன்வைக்குமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினை உள்ளடக்கிய உரிய உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டுள்ளனர் என்பதுடன், ஊடகங்களினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். ஆதலால், 2025 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தினை எட்டுவதற்கு எதிர்பார்க்கின்றேன். 2025.07.30 ஆந் திகதியன்று கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களுக்குப் போதுமானவாறு 2025.07.18 ஆந் திகதியன்று ரூபா. 60.5 மில்லியன் கட்டுநிதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதன் பிரகாரம் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பில் வீடமைப்பு மற்றும் மலசலகூட உதவி வழங்கப்பட்டுவருவதுடன், எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கும் கட்டுநிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

ஜயமாலி சி. விக்ரமஆரச்சி,

பணிப்பாளர்.